**செய்தி வெளியீடு எண் : 172** **நாள்: 24.01.2022**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் தலைமையில் இன்று (24-01-2022) தலைமைச் செயலகத்தில் மாநில வங்கியாளர் குழுவின் சிறப்பு கூட்டம் நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து வங்கிகளின் ATM, படிவங்களில் தமிழ் பயன்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினார். மேலும், வங்கியின் உதவி மையங்கள் மற்றும் பொது மக்களுடன் தொடர்பில் இருக்கும் அலுவலர்கள் தமிழ் நன்கு அறிந்திருக்க வேண்டும் என வலியுறுத்தினார். பல்வேறு அரசுத் திட்டங்களில் வங்கிகளின் செயல்பாடு குறித்து மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். முன்னுரிமைத் துறைகளுக்கு கடன் வழங்கும் திட்டங்களை முனைப்பாகச் செயல்படுத்த வேண்டும் என கூறினார். குறிப்பாக, ஏழை எளிய மாணவர்களுக்கு கல்விக் கடன் வழங்கி உதவிட வேண்டும் என வங்கிகளை வலியுறுத்தினார். வங்கி வசதிகள் இல்லாத தொலைதூரப் பகுதிகளில், குறிப்பாக வன மற்றும் பழங்குடியினப் பகுதிகளில் வங்கி வசதிகள் வழங்க வேண்டும் என வலியுறுத்தினார். முதல் முறையாக, வரும் 2022-23 ஆம் நிதியாண்டின் தமிழக நிதிநிலை அறிக்கைக்காக வங்கியாளர்களுடன் கலந்தாலோசித்து, பரிந்துரைகள் பெறப்பட்டன.

நிதித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் திரு. நா.முருகானந்தம், இ.ஆ.ப.,, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மற்றும் மாநில அளவிலான வங்கியாளர் குழு தலைவர் திரு.பார்த்தா ப்ரதிம் சென்குப்தா, இந்திய ரிசர்வ் வங்கி (சென்னை) மண்டல இயக்குநர் திரு.எஸ்.எம்.என்.ஸ்வாமி நிதித்துறை (செலவினம்) அரசுச் செயலர் திரு.வி.அருண்ராய், இ.ஆ.ப., மற்றும் நிதித்துறை மற்றும் வங்கிகளைச் சார்ந்த உயர் அலுவலர்கள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**